பா.ஜ.க.வில் சேரப்போகிறேன் என்பது வடிகட்டிய பொய்

என் அரசியல் வாழ்க்கையை காயப்படுத்த சில குள்ளநரிகள் பரப்பும் வதந்தி

என் ஆயுள் முழுவதையும் அ.தி.மு.க.வுக்கு ஒப்படைத்து பணியாற்றுகிறேன்

ஓ.பன்னீர்செல்வம் அறிக்கை

சென்னை, மே.2–

'நான் கட்சி மாறப்போகிறேன் என்பது வடிகட்டிய பொய் வதந்தி' என்று துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

என் அரசியல் வாழ்க்கையை காயப்படுத்த சில குள்ளநரிகள் பரப்பும் வதந்தி என்று அவர் கூறியுள்ளார்.

என் ஆயுள் முழுவதையும் அண்ணா தி.மு.க.வுக்காக ஒப்படைத்து பணியாற்றி வருகிறேன் என்று அவர் கூறியுள்ளார்.

அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதல்வருமான ஓ.பன்னீர்செல்வம் அறிக்கையில் கூறியிருப்பதாவது:– அன்பார்ந்த ஊடக பெருமக்களுக்கும், ஊடகங்களின் கருத்துகளை உள்வாங்கி அது உண்மையாகத்தான் இருக்கும் என்கிற இன்னும் சொற்ப நம்பிக்கை கொண்டிருக்கும் பொதுமக்களுக்கும் என் உயிரினும் மேலான கழக உடன்பிறப்புகளுக்கும் வேதனையோடு இந்த அறிக்கையை நான் விடுக்கிறேன்.

அண்ணாதி.மு.க.வின்ஒருசாதாரண தொண்டனாக பொது வாழ்க்கையில் களப்பணியாற்றிய பெரியகுளம் நகராட்சி தலைவராகவும், புனிதமிக்க சட்டப் பேரவைக்குள் பாதம் பதிக்கிற வாய்ப்பை வழங்கி, பிறகு அரசியல் சாசனத்தின் பேரில் வருவாய்த்துறை அமைச்சராக, நிதிஅமைச்சராக, பொதுப்பணித்துறை அமைச்சராக, இவையாவிற்கும் மேலாக இந்நாட்டு அரசியலையே தென்னாட்டு பக்கம் திருப்பிக் காட்டிய புரட்சித்தலைவி அம்மா வீற்றிருந்த முதலமைச்சர் இருக்கையில் மூன்று முறையும், அதுபோலவே கழகத்தின் பொருளாளராக ஏறத்தாழ 12 ஆண்டுகளுக்கு மேலாக என்னை அமர்த்தியும், பூக்களுக்கும், புன்னகையை கற்றுத்தந்த பொன்மனச் செம்மலாம், மண்ணுலகிற்கு வந்துபோன மனிதநேயத்தின் மாசறு வடிவாம் புரட்சித்தலைவர் உருவாக்கிய இயக்கத்திற்கு இன்று ஒருங்கிணைப்பாளராகவும், ஏராள வாய்ப்புகளை எனக்கு வழங்கி என் கனவிலும் நான் எதிர்பார்த்திராத உயரங்களை தந்து ஒரு சாதாரண பெரியகுளத்தை சேர்ந்த பன்னீர்செல்வத்திற்கு இத்தனை பெருமைகளை அள்ளித்தந்த இந்த இயக்கத்தை விட்டு நான் பா.ஜ.க.வுக்கு செல்லப்போகிறேன் என்று ஒரு அடுக்காத புரளியை அவதூறாக பரப்பி வருகின்றன சில உள் நோக்கம் படைத்த ஊடகங்கள்.

வம்சாவளிகளும் நன்றி கடன்

அதுவும் என் மீது அளவில்லா நம்பிக்கை வைத்த, நான் ஆண்டவரின் வடிவத்தில் அன்றாடம் வணங்குகிற அம்மா என் மீது வைத்த நம்பிக்கையை அதன் வழியில் அந்த மகராசி மடியிட்டு வளர்த்த மகோன்னத தொண்டர்களின் அளவற்ற பாசத்தையும் நான் மட்டுமல்ல, என் குடும்பம் மட்டுமல்ல என் வம்சாவளிகளும் எத்தனை தலைமுறைக்கு நன்றிக்கடன் செலுத்தினாலும் அது போதாது போதாது என்பதை என் உதிரத்தில் கலந்த உறுதியை கொண்டவன் நான்.

நான் வணங்கும் அம்மா அரசியல் ரீதியாக தேர்தல் களத்தில் எதிர்நிலைகள் கொண்டபோதிலும் பாரத பிரதமர் நரேந்திரமோடியின் பதவியேற்பு வைபவத்திற்கு மகிழ்ச்சியோடு கலந்துகொண்டு மோடியின் முடிசூட்டு விழாவை மனதார பாராட்டியது மட்டுமல்லாமல் அவரது ஆட்சிக்காலத்தில் மாநிலங்களவையில் பா.ஜ.க. நெருக்கடியான அறுதி பெரும்பான்மையை கொண்டிருந்தபோதும் பா.ஜ.க. அரசு கொண்டு வந்த ஏராளமான தீர்மானங்களை கழகத்தின் வலுவான ஆதரவால் நிறைவேற்றிக் கொடுத்தவர் எங்கள் அம்மா.

தாயின் வழியை பின்பற்றி....

அதுபோலவே எங்கள் அம்மாவின் பதவியேற்பு பட்டாபிசேகத்திற்கு பாசத்தோடு வந்து கலந்துகொண்டு முன் வரிசையில் நின்று முகம் மலர வாழ்த்தியவர் நரேந்திரமோடி. இப்படி நான் வணங்கும் என் தலைவி மதித்த தலைவர்கள் மீது நானும், எனது இயக்கமும் காட்டுவது எங்கள் தாயின் வழியை பின்பற்றுகிறோம் என்பதையும் அண்ணா தி.மு.க.வின் அரசியல் எதிர்காலத்திற்கு உகந்த முடிவாக இருக்கிறதா என்பதை உரசிப்பார்த்தும், தொண்டர்களிடம் இருந்தும், மக்களிடம் இருந்தும் கருத்துக்களை உள்வாங்கி கொண்டும்தான்.

பா.ஜ.க.வோடு 1998ல் கூட்டணி வைத்து இந்த நாட்டிற்கு பாரத பிரதமராக வாஜ்பாயையும், இந்த தேசத்திற்கு முதல் குடிமகனாக அணுவிஞ்ஞானி அப்துல்கலாமையும் அடையாளம் காட்டிய எங்கள் அம்மா 2004ல் மீண்டும் பா.ஜ.க.வுக்கு 7 இடங்களை வழங்கி கூட்டணி அமைத்தார் என்பதெல்லாம் பா.ஜ.க.வுடன் அண்ணா தி.மு.க.வுக்கு இருக்கிற தேசப்பற்று, தெய்வ நம்பிக்கை போன்ற ஒத்த கொள்கைகளும் ஒரு காரணமாகும்.

குள்ளநரிகள் பரப்பும் வதந்தி

அப்படிப்பட்ட எங்கள் அம்மா வகுத்து கொடுத்த பாதத் தடத்தில் அண்ணா தி.மு.க.வின் பிரகாசமான எதிர்காலத்திற்காக நாங்கள் மேற்கொண்டு வரும் ஒரு இணக்கத்தையும், நாங்கள் அமைத்த பா.ஜ.க., பா.ம.க., தே.மு.தி.க., த.மா.கா., அகில இந்திய மூவேந்தர் முன்னேற்றக்கழகம், புரட்சி பாரதம், புதிய தமிழகம், புதிய நீதிக்கட்சி, சமத்துவ மக்கள் கட்சி, பெருந்தலைவர் மக்கள் கட்சி, அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் இப்படியாக இந்த மெகா கூட்டணி ஈட்ட இருக்கும் மாபெரும் வெற்றியை நினைத்து குலை நடுக்கம் கொள்ளும் சில குள்ள நரிகள் என் மீது வதந்திகளை பரப்பி என்னையும், என் அரசியல் வாழ்க்கையையும் காயப்படுத்த அலைவதை நினைத்து மிகுந்த வேதனை கொள்கிறேன்.

ஓட்டக்காரத் தேவர் எனும் ஒரு விவசாயியின் மகனாக பிறந்த என்னை பல உச்சங்களில் அமர்த்தி மக்கள் திலகமும், மகராசி தாயும் உயிராக போற்றிய இயக்கத்தை இக்கட்டான காலத்தில் அன்புச் சகோதரர் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியோடு இணை கரம் கொண்டு இந்த இயக்கத்தை இமையாக காப்பதற்கும், இந்திய அரசியலை இரு இலை இயக்கம் தான் தீர்மானிக்கும் என்கிற பொற்காலத்தை நோக்கி முன்னெடுத்து செல்வதற்கும் எனது ஆயுள் மொத்தத்தையும் நான் அண்ணாதி.மு.க.வுக்காகஒப்படைத்து தொண்டாற்றுகிற ஓர் ஊழியன் என்பதையும், என் உயிர்போகும் நாளில் அண்ணா தி.மு.க.வின் கொடி போர்த்துவதையே என் வாழ்நாளில் பெருமையாக, லட்சியமாக கொண்டு வாழும் இந்த எளியவனை கட்சிமாறப் போகிறேன், வேறு கட்சிக்கு போக போகிறேன் என்றெல்லாம் வடிகட்டிய பொய்யை வதந்திகளாக்கி அதனை இந்திய விடுதலைக்கு குரல் கொடுத்த ஊடகங்கள் கூட நடுநிலை என்பதை மறந்து யாருக்கோ வால் பிடித்து புரளியால் குறளி வித்தை செய்வதை நினைத்து மிகுந்த வேதனை அடைகிறேன்.

ஒருவரின் உழைப்பை, பெருமையை, கண்ணியத்தை பொய்யான எழுத்துக்களால் கறை படித்துவிடலாம் என திட்டமிடுவோருக்கு மக்கள் சக்தியும், நான் வணங்கும் இறை சக்தியும் உரிய கூலியை கொடுக்கும் என்பதை மட்டும் இவ்வேளையில் தெரிவித்து என் மீது பரப்பப்படும் அவதூறுகளை, அடுக்காத பொய்குற்றச்சாட்டுகளை கழகத் தொண்டனும் சரி, என் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் தமிழக மக்களும் செவிகொடுத்து ஏற்கமாட்டார்கள் என்கிற எனது ஆழமான நம்பிக்கையையும் இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வத்தை இன்று அவரது இல்லத்தில், பெருந்தலைவர் மக்கள் கட்சியின் தலைவர் என்.ஆர்.தனபாலன் நேரில் சந்தித்து சூலூர், அரவக்குறிச்சி, திருப்பரங்குன்றம், ஒட்டப்பிடாரம் ஆகிய சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு தமது கட்சியின் முழு ஆதரவை தெரிவித்தார்.

மானியம் அல்லாத சமையல் கியாஸ் விலை ரூ.6 உயர்வு

புதுடெல்லி, மே.2

மானியம் அல்லாத சமையல் கியாஸ் விலை ரூ.6 உயர்ந்தது.

சமையல் கியாஸ் விலை, மாதந்தோறும் 1ந் தேதி மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், நேற்று மானிய கியாஸ் விலையும், மானியம் அல்லாத கியாஸ் விலையும் உயர்த்தப்பட்டன.

ஆண்டுக்கு 12 சிலிண்டர்களுக்கு மேல் வாங்குபவர்களுக்கு மானியம் அல்லாத விலையில் சமையல் கியாஸ் சிலிண்டர் வழங்கப்படுகிறது. இதன் விலை சிலிண்டருக்கு ரூ.6 உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் இதன் விலை சிலிண்டருக்கு ரூ.722ல் இருந்து ரூ.728 ஆக உயர்ந்தது.

இதுபோல், மானியத்துடன் கூடிய கியாஸ் சிலிண்டர் விலை 28 காசு உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் இதன் விலை ரூ.484.02 ஆக உயர்ந்துள்ளது.

இதுபோல், டெல்லி, மும்பை, கொல்கத்தா போன்ற பெருநகரங்களிலும் கியாஸ் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

விமான எரிபொருள் விலையும் கிலோ லிட்டருக்கு ரூ.1,595.63 உயர்ந்தது. இது, 2.5 சதவீத விலை உயர்வாகும். கிலோ லிட்டருக்கு 65 ஆயிரத்து 67 ரூபாயாக இதன் விலை உயர்ந்துள்ளது.

தொடர்ந்து 3வது மாதமாக, விமான எரிபொருள் விலை உயர்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது. ரேஷன் கடைகளில் வினியோகிக்கப்படும் மண்ணெண்ணையின் விலை, லிட்டருக்கு 25 காசு அதிகரித்துள்ளது.

3 எம்.எல்.ஏ.க்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்ட விவகாரம்

தி.மு.க. – அ.ம.மு.க. நெருக்கம் வெட்ட வெளிச்சமாகி விட்டது

எடப்பாடி பழனிசாமி பேட்டி

கோவை, மே.2

'கட்சிக்கு விரோதமாக செயல்பட்ட 3 எம்.எல்.ஏ.க்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்ட விவகாரத்தில் தி.மு.க–அ.ம.மு.க. இடையே உள்ள நெருக்கம் வெட்ட வெளிச்சமாகி விட்டது' என்று கோவை விமான நிலையத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

கோவை மாவட்டம் சூலூர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 19ந் தேதி நடக்கிறது. இதில் அண்ணா தி.மு.க. சார்பில் வி.பி.கந்தசாமி போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்வதற்காக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேற்று பிற்பகல் 3 மணிக்கு சென்னையில் இருந்து கோவை வந்தார். அவர் விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த 3 எம்.எல்.ஏ.க்கள் டி.டி.வி. தினகரனுக்கு ஆதரவாக செயல்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. எனவே கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கொறடா, சட்டசபை சபாநாயகரிடம் புகார் அளித்தார். எங்கள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் எதிராக செயல்பட்ட காரணத்திற்காக சில ஆதாரத்துடன் கொறடா புகார் அளித்திருக்கிறார். இதில் சட்டசபை சபாநாயகர்தான் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஸ்டாலின் கொந்தளிப்பு ஏன்?

இன்றைய தினம் தி.மு.க. வுக்கும் அ.ம.மு.க.வுக்கும் உள்ள நெருக்கம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. எதிர்க்கட்சி தலைவர் ஏன் இப்படி கொந்தளிக்கிறார் என்று தெரியவில்லை. எங்கள் இயக்கத்தை சேர்ந்தவர் இயக்கத்துக்கு விரோதமாக செயல்படும்போது புகார் செய்கிறோம். அவர்களின் இயக்கத்தை சேர்ந்தவர்களும் அல்ல. அப்படியிருக்கும் போது எதிர்க்கட்சி தலைவருக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது. இதனால் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவோம் என்று எதிர்க்கட்சி தலைவர் சொல்லி இருக்கிறார். இதிலிருந்து தி.மு.க.வுக்கும், தினகரன் கட்சிக்கும் இடையே எவ்வளவு நெருக்கம் இருக்கிறது என்பது அவருடைய பேச்சில் இருந்தும், கொந்தளிப்பில் இருந்தும் தெளிவாக தெரிகிறது.

4 சட்டசபை தொகுதி இடைத்தேர்தலிலும் அண்ணா தி.மு.க. சிறப்பான முறையில் தேர்தல் பணியாற்றி வெற்றி பெறும். அதுமட்டுமல்லாமல் ஏற்கனவே நடந்த 18 சட்டசபை தொகுதி இடைத்தேர்தலிலும் அண்ணா தி.மு.க. வெற்றி பெறும்.

நாடாளுமன்ற தேர்தல் முடிவு எப்படி இருக்கும் என்ற உளவுத்துறையின் தகவல் எதுவும் எனக்கு வரவில்லை. தேர்தல் விதிமுறைகளினால் எங்களுக்கும், உளவுத்துறைக்கும் தொடர்பு இல்லாமல் உள்ளது. தமிழகத்தில் வேலூர் தவிர 38 தொகுதிகள் மற்றும் புதுச்சேரி உள்பட 39 நாடாளுமன்ற தொகுதிகளிலும் அண்ணா தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும்.

குடிநீர் பிரச்சினையை தீர்க்க உத்தரவு

தேர்தல் விதிமுறைகள் நடைமுறையில் இருக்கிற காரணத்தினால் தேர்தலுக்கு முன்பாகவே தமிழகத்தில் நிலவும் வறட்சி குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அந்த ஆலோசனை கூட்டத்தில் உரிய துறைகளுக்கு அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளது. வறட்சி மற்றும் குடிநீர் பிரச்சினை ஏற்படும் போது உரிய நடவடிக்கை எடுத்து தமிழகம் முழுவதும் எங்கும் குடிநீர் பிரச்சினை இல்லாத அளவிற்கு பார்த்துக்கொள்ளுமாறு தேர்தலுக்கு முன்பாக ஆலோசனை வழங்கப்பட்டது.

அந்த ஆலோசனைப்படி அதிகாரிகள் செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள். எங்கெங்கு குடிநீர் பிரச்சினை இருக்கிறதோ உரிய நடவடிக்கை எடுத்து குடிநீர் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன், பி.ஆர்.ஜி.அருண்குமார் எம்.எல்.ஏ., மற்றும் சூலூர் தொகுதி வேட்பாளர் வி.பி.கந்தசாமி மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

என்ஜினீயரிங் படிப்பு: இன்று ஆன்லைன் விண்ணப்பம் துவங்கியது; 31–ந்தேதி கடைசி நாள்

சென்னை, மே 2–

என்ஜினீயரிங் படிப்பில் சேர இன்று ஆன்லைன் விண்ணப்பம் துவங்கியது. மாணவ– மாணவிகள் ஆர்வமுடன் அதில் கேட்டுள்ள விவரங்களை பதிவு செய்தனர்.

தமிழகத்தில் 570க்கும் மேற்பட்ட என்ஜினீயரிங் கல்லூரிகள் உள்ளன. இதில், அண்ணா பல்கலைக் கழக உறுப்பு கல்லூரிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், தனியார் சுயநிதி கல்லூரிகள் என அனைத்து வகை பொறியியல் கல்லூரிகளும் அடங்கும். இக்கல்லூரிகளில் வழங்கப்படும் பிஇ, பிடெக் படிப்புகளில் ஏறத்தாழ 2 லட்சம் இடங்கள் ஒற்றைச்சாளர முறையில் பொது கலந்தாய்வு மூலம் நிரப்பப்படும்.

கடந்த ஆண்டு வரை என்ஜினீயரிங் மாணவர் சேர்க்கைக்கான அனைத்து பணிகளையும் தமிழக அரசு சார்பில் அண்ணா பல்கலைக்கழகமே மேற்கொண்டு வந்தது. ஆனால், இந்த ஆண்டு மாணவர் சேர்க்கை தொடர்பான அனைத்துப் பணிகளையும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மேற்கொள்கிறது. அந்த வகையில், என்ஜினீயரிங் மாணவர் சேர்க்கைக்கான ஆன்லைன் பதிவு இன்று (2–ந்தேதி) துவங்கியது. 31ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று இயக்ககம் அறிவித்திருந்தது.

அதன்படி என்ஜினீயரிங் படிப்பில் அரசு ஒதுக்கீட்டில் உள்ள இடங்களில் சேர விரும்பம் மாணவ–மாணவிகள் www.tneaonline.in, www.tndte.gov.in இணையதளங்களில் ஆன்லைனில் பதிவை தொடங்கினார்கள்.

ஆன்லைனில் விண்ணப்பிக்கும்போது பதிவு கட்டணத்தையும் நெட் பேங்கிங் அல்லது டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு வாயிலாக செலுத்தினார்கள்.

ஆன்லைனில் பதிவு செய்ய இயலாத மாணவர்களின் வசதிக்காக 42 தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கை சேவை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் விவரங் களை www.tndte.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

அசல் சான்றிதழ் சரிபார்ப்புக்கான உதவி மையத்தை ஆன்லைனில் விண்ணப்பிக்கும்போது குறிப்பிட வேண்டும். சான்றிதழ் சரிபார்ப்பு நாள், நேரம், இடம் ஆகிய விவரங்கள் மாணவர்களுக்கு எஸ்எம்எஸ் மற்றும் இ–மெயில் மூலமாக பின்னர் அனுப்பப்படும்.

விளையாட்டு ஒதுக்கீட்டுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு சென்னையில் மட்டும் நடைபெறும். அதேபோல், சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வும் சென்னையில் மட்டுமே நடைபெறும். பி.ஆர்க். மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் என தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கை தலைவர் அறிவித்துள்ளார்.

ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

(முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்) CIN : L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர்ஸ், 8வது தளம், ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு,
சென்னை–600 031. தொலைபேசி எண்: + 91 44 4564 4000. பேக்ஸ்: + 91 44 4564 4022

IDFC FIRST Bank

(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு)

கீழ்க்கண்ட கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிலிருந்து (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** கீழ்க்குறிப்பிட்டுள்ள ஈடுபெற்ற கடன்களை பெற்றிருந்தனர். கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் பெற்ற கடனுக்கு ஈடாக உரிய சொத்துக்கள் அடமானமாக பெறப்பட்டது. கடன் ஒப்பந்தங்களில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை கடைபிடிக்க மற்றும் ஒழுங்காக திரும்ப செலுத்த அவர்கள் தவறிவிட்டனர். ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் வழிகாட்டுதலின்படி அவர்களின் கடன்கள் என்பிஏ ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்கு (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** கீழ்க்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி அனுப்பப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டிய பாக்கித் தொகை மற்றும் மேற்சொன்ன தொகையின் மீது அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான மற்றும் பொருந்தக்கூடிய மேலும் வட்டி ஆகியவை கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன் கணக்கு எண்.	கடன் வகை	கடன்தாரர்கள் பெயர்	13(2) அறிவிப்பு படி செலுத்த வேண்டிய தொகை	அறிவிப்பு தேதி	ஈடுபெற்ற ஆஸ்தி விவரங்கள்
21	12206092	வீட்டு கடன் எல்ஏபி	1. K. முகமது ரஹமத்துல்லா 2. முகமது கலிமுல்லா R 3. கே பி என் ஏஜென்சீஸ்	ரூ. 25,62,462.91/–	15/04/2019	சென்னை 600 012, பட்டாளம், முதல் சந்து முன்னர் 2வது சந்து, டி'மெல்லோஸ் ரோடு என்று அழைக்கப்படுவது, மசூதி தெரு,புதிய கதவு எண். 45, பழைய கதவு எண். 2/20 மற்றும் 33ல் உள்ள நிலம், கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். நில விஸ்தீரணம் 1800 சதுர அடி. பழைய சர்வே எண். 357 மற்றும் 367 பகுதி, புதிய ரீ சர்வே எண். 1736/2, பட்டா சி.ஏ. எண். 146/15, பட்டாபடி புதிய டி.எஸ். எண். 1736/105, பிளாக் எண். 39, வேப்பேரி கிராமம், போர்ட்–தண்டையார்பேட்டை தாலுக்கா, சென்னை மாவட்டம், எல்லைகள்: வடக்கில்: 3 அடி பொது சந்து மற்றும் மாநகராட்சி நிலம், தெற்கில் : பிரமிசஸ் எண். 1/20, பழைய எண். 21, புதிய எண். 34/46, மசூதி தெரு (2வது சந்து டி'மெல்லோஸ் ரோடு), கிழக்கில்: 3 அடி பொது சந்து மற்றும் மாநகராட்சி உருது பள்ளி, மேற்கில்: அப்துல் ஜப்பார் அவர்களுக்கு செந்தமான சொத்து. அளவு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 60 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 30 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்: 30 அடி. மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பெரியமேடு சார்பதிவவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாக்கித்தொகை மற்றும் அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான விகிதத்தில் வட்டி மற்றும் இதர கட்டணங்களை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்கு (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** செலுத்துமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்கு (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** செலுத்த வேண்டிய தொகையை பெறுவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள அடமான சொத்துக்களின் மீது கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14ன் கீழ் நடவடிக்கைகளை கீழ்க்கையொப்பமிட்டவர் மேற்கொள்வார். மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(13)ன்படி மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்றல்/குத்தகைக்கு விடுதல் அல்லது இதர வகையில் ஈடுபட உங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதை அறியவும்.

தேதி : 02.05.2019
இடம்: சென்னை

ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்
முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
Website: www.eihassociatedhotels.in
Phone: 91-44-22344747,
Fax: 91-44-22346699

அறிவிப்பு

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 31 மார்ச், 2019ல் முடிந்த காலாண்டு/நிதி ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளித்து, பதிவு செய்ய கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் செவ்வாய்க்கிழமை, 28 மே 2019 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

இடம்: கொல்கத்தா
தேதி: 30 ஏப்ரல் 2019

ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

(முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்) CIN : L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர்ஸ், 8வது தளம், ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு,
சென்னை–600 031. தொலைபேசி எண்: + 91 44 4564 4000. பேக்ஸ்: + 91 44 4564 4022

IDFC FIRST Bank

(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு)

கீழ்க்கண்ட கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிலிருந்து (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** கீழ்க்குறிப்பிட்டுள்ள ஈடுபெற்ற கடன்களை பெற்றிருந்தனர். கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் பெற்ற கடனுக்கு ஈடாக உரிய சொத்துக்கள் அடமானமாக பெறப்பட்டது. கடன் ஒப்பந்தங்களில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை கடைபிடிக்க மற்றும் ஒழுங்காக திரும்ப செலுத்த அவர்கள் தவறிவிட்டனர். ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் வழிகாட்டுதலின்படி அவர்களின் கடன்கள் என்பிஏ ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்கு (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** கீழ்க்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி அனுப்பப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டிய பாக்கித் தொகை மற்றும் மேற்சொன்ன தொகையின் மீது அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான மற்றும் பொருந்தக்கூடிய மேலும் வட்டி ஆகியவை கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன் கணக்கு எண்.	கடன் வகை	கடன்தாரர்கள் பெயர்	13(2) அறிவிப்பு படி செலுத்த வேண்டிய தொகை	அறிவிப்பு தேதி	ஈடுபெற்ற ஆஸ்தி விவரங்கள்
1	13480078	அடமான கடன்	1. A. சங்கர் 2. S. பரிமளா	ரூ. 13,56,885.70/–	12/04/2019	வேலூர் மாவட்டம், வேலூர் பதிவு மாவட்டம், கே.வி. குப்பம் தாலுக்கா கே.வி. குப்பம் சார்பதிவாளர் அலுவலகம், கே.வி. குப்பம் கிராமம், எஸ்.எண். 177/1எம் மனை அளவு கிழக்கிலிருந்து மேற்காக (என்) பக்கம் 12 அடி (எஸ்) பக்கம் 10½ அடி, வடக்கிலிருந்து தெற்காக இரு பக்கம் 80 அடி. பரப்பு 900 சதுர அடி. எல்லைகள் கிழக்கில் ஸ்ரீனிவாசன் மற்றும் ஜெயகுமார் மனைகள், மேற்கில் ஜெகநாதன் மனை, வடக்கில் சேனல் மற்றும் தெற்கில் தெரு மற்றும் அங்கு கட்டப்பட்டுள்ள ஆர்சிசி ரூப் வீடு

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாக்கித்தொகை மற்றும் அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான விகிதத்தில் வட்டி மற்றும் இதர கட்டணங்களை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் **ஐடிஎப்